மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்பொழுது நகரசபைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அப்படிப்பட்ட மக்கள் தொகை அதிகமாகவுள்ள இடங்களில் உள்ள டிஸ்பென்சரிகள், மருத்துவ மனைகள் பல ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. அதற்குப் பின்னுல் முறைப்படுத்த வேண்டிய மிக நெருக்கடியான அவசியம் இருப்பதால் அதற்குப் பின்னுல்தான் மேஜர் பஞ்சாயத்து அல்லது டவுன் பஞ்சாயத்துக்களில் உள்ள மருந்தகங்களைப் பற்றி எண்ணிப் பார்க்க முடியும். இப்படிப்பட்ட டவுன் பஞ்சாயத்து களுக்குப் பஞ்சாயத்து யூனியனே, பஞ்சாயத்தோ, செலவை ஏற்பது மட்டும் அல்ல, அரசாங்கத்தில் 5,000 அல்லது 7,000 ரூபாய் என்று முறைப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. அதற்குமேல் அரசு ஏற்றுக் கொள்ளும் பொறுப்பைப்பற்றி இனிதான் சிந்திக்க வேண்டும்.

Sheep Breeding Co-operative Societies.

* 400 Q.—Thiru B. VENKATASAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to start co-operative sheep-rearing credit societies in Dharmapuri district; and

(*b*) if so, when they will be started?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) வேளாண்மை மறுகடன் உதவிக் கடன் உதவியுடன் தருமபுரி மாவட்டம், கிலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த குண்டு மார்னபல்லி கிராமத்தில் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைப்பது குறித்த செயற்குறிப்பை கால்நடை வளர்ப்புத்துறை இயக்குநர் பணிந்தனுப்பி யுள்ளார்.

(இ) வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்தின் ஒப்புதலும் அனுமதியும் கிடைப்பதன் மேல் இந்தச் சங்கம் அமைக்கப்படும்.

Thiru B. VENKATASAMY : The entire Dharmapuri district is having good potentialities to start co-operative sheep-rearing credit societies. May I request the Hon. Minister to start these sheep rearing co-operative societies in the entire Dharmapuri district?

The Hon. Thiru K. ANBAZHAGAN : No proposal can be for the entire Dharmapuri district. It is based upon the units that are formed, that is the co-operative units that are formed either in big village or in town. Here in this case it is only pending because the loan, that is the total amount of loan that is required is to be sanctioned by the concerned authorities.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த ஆடுவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை மாவட்டத்தில் ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு இரண்டு ஆரம்பிக்கப்பட்டன. அதற்குப் பிறகும் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று மனுக்கள் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன. பொதுவாக இந்த விவசாயிகளுக்கு ஆடுவளர்ப்பு என்பது ஒரு உப தொழிலாகவும், நிலமில்லாதவர் களுக்கு வருமானத்திற்கு வழி அளிப்பதாகவும் இருப்பதால் இதை அபிவிருத்தி செய்யவும், முடிந்த இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள்

1971 சூலை 23]

ஏற்படுத்த உதவியும் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்பொழுது கால்நடை வளர்ப்பிலே மிக முக்கியமான பங்கு வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கிராம மக்களை ஈடுபடுத்துவது அவசியம்தான். அப்படி அவர்கள் விண்ணப்பித்தால் அரசாங்கம் பெருமளவில் ஏற்றுக்கொள்ள முடிவு செய்யும்.

திருப்பூர் நகருக்கு ஆம்புலன்ஸ் வண்டி.

* 401 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் திருப்பூர் நகருக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை. திருப்பூர் நகருக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆம்புலன்ஸ் வண்டி 4—4—1971 முதல், தற்காலிகமாக உடுமலைபேட்டை நகருக்கு (E.S.I.) நடமாடும் மருந்தக வண்டியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் உடுமலைபேட்டை நடமாடும் மருந்தக வண்டி செயலற்ற நிலையில் உள்ளது. தவிரவும், உடுமலைபேட்டை ஆம்புலன்ஸ் வண்டியும் பழுதுபட்டுள்ளது. பழுதுபட்டுள்ள உடுமலைபேட்டை ஆம்புலன்ஸ் வண்டியை உடனடியாகச் சரிபார்க்க துரித ஏற்பாடுகள் செய்யவும், அதுவரையில் உடுமலைபேட்டைக்கு வேறு வண்டி ஏற்பாடு செய்யவும் திருப்பூருக்கான ஆம்புலன்ஸ் வண்டியை மீண்டும் திருப்பூருக்கே உடனடியாக ஒதுக்கும்படியும், சுகாதார குடும்ப நலத்துறை இயக்குநர் தெரிவிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் போன வாரத்தில் ஆம்புலன்ஸ் திருப்பூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஆம்புலன்ஸ் வண்டியை நடமாடும் மருத்துவ வண்டியாக விடுவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டு 15 நாட்களுக்கு மேல் ஆகின்றது. உத்தரவு அனுப்பி வைத்து ஒரு வாரம் ஆகிறது.

Employees State Insurance Hospitals.

* 402 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of Employees State Insurance Hospitals in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?